JPL
C1032

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

T 01/7/90

# ஜெனீவா ஒப்பந்தங்களும்

சர்வதேச
செஞ்சிலுவை
கமிட்டியும்

PUBLIC LIBRARY
JAFFNA

KOHA JPL

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

## அவற்றில் இலங்கைக்குப் பொருத்தமான அம்சங்கள்

இரண்டாவது பதிப்பு

**ஜனநாயக உரிமைகளைப்
பாதுகாப்பதற்கான இயக்கம்**

PUBLIC LIBRARY
JAFFNA

## <u>விதிப்பிரிவு 3</u>

**சர்வதேச குணாம்சத்தைக் கொண்டிராத முரண்பாடுகள்**

உயர் மட்டத்தில் ஒப்பந்தஞ் செய்துகொண்ட நாடுகள் ஒன்றின் பிரதேசத்தில் சர்வதேசக் குணாம்சத்தினைக் கொண்டிராத ஆயுத முரண்பாடொன்று ஏற்படும்பட்சத்தில் முரண்பட்டுநிற்கும் ஒவ்வொரு தரப்பினரும் மிகக்குறைந்தபட்சம் பின்வரும் விதிகளையேனும் உபயோகிக்கக் கடப்பாடுடையவராவர்.

(1) ஆயுதப்படைகளின் உறுப்பினர்கள் உட்பட யுத்தத்தில் செயல் முனைப்பாக ஈடுபடாத நபர்கள் தங்கள் ஆயுதங்களைக் கீழே வைத்தவர்கள், நோயுற்றதனால், காயங்களினால், தடுத்துவைத்ததனால் அல்லது வேறெந்தக் காரணங்களினாலும் யுத்தத்தை இடைநடுவில் நிறுத்தியவர்கள் இனம், நிறம் மதம் அல்லது நம்பிக்கை, பால், பிறப்பு அல்லது செல்வம், அல்லது இவற்றையொத்த வேறெந்த வகையறாக்களினாலும் எந்தவொரு பிரதிகூலமான வேறுபாடுகளுமின்றி சகல சந்தர்ப்பங்களிலும் மானுட நேயத்துடன் நடாத்தப்படல் வேண்டும்.

இதுவரையில், மேற்குறிப்பிடப்பட்ட நபர்களைப் பொறுத்த மட்டில் கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் யாவும் எந்த நேரத்திலும், எந்தவோர் இடமாகவிருந்தாலும் தடைசெய்யப்பட்டவையாக உள்ளன.

(அ) உயிருக்கும் நபருக்கும் வன்முறையிழைத்தல், குறிப்பாக சகல வகையான கொலைகள், அங்கவீனமாக்கல், கொடூரமானமுறையில் நடாத்தல், சித்திரவதைசெய்தல்;

(ஆ) பணயக்கைதிகளாக்கல்;

(இ) சொந்த கௌரவத்திற்கு ஊறுவிளைவித்தல் குறிப்பாக இழிவுபடுத்தல், அவமதித்தல் நடவடிக்கைகள்.

(ஈ) நாகரீகமுள்ள மக்களால் இன்றியமையாதவையென்று அங்கீகரிக்கப்பட்ட நீதிபரிபாலன உறுதிப்பாடுகள் யாவற்றையுங்கொண்ட, ஒழுங்கானமுறையில் அமைக்கப்பட்ட நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்ட முன்னைய தீர்ப்பெதுவும் இல்லாமல் சிறைத்தண்டனை விதித்தல், மரண தண்டனையை நிறைவேற்றுதல்.

(2) காயமுற்றவர்களும் நோயுற்றவர்களும் எடுத்துச்செல்லப்பட்டு உரியமுறையில் பராமரிக்கப்படவேண்டும்.

செஞ்சிலுவையின் சர்வதேசக் கமிட்டியினைப் போன்ற பாரபட்சமற்ற மனிதநேய அமைப்பு மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களுக்குத் தனது சேவைகளை வழங்கக்கூடும்.

மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் விஷேச ஒப்பந்தங்கள்மூலமாக, தற்போதுள்ள ஒப்பந்தத்தின் ஒரு பகுதியினையோ அல்லது யாவற்றையுமோ நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

மேற்கூறப்பட்ட ஷரத்துக்களின் பிரயோகம் மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களின் சட்டபூர்வமான அந்தஸ்தினை எவ்வகையிலும் பாதிக்கக்கூடாது.

மேல்காண்பவை 1949 ஜெனீவா உடன்படிக்கைகளில் உள்ளவை.

சேர்வு எண்
வகுப்பெண் 323.4

## இலங்கையில் தற்போதுள்ள சூழ்நிலைக்குப் பொருத்தமான ஜெனீவா ஒப்பந்தங்களும்

## செஞ்சிலுவையின் சர்வதேசக் கமிட்டியும்

*************************

- ஜ.உ.பா.இ. அறிக்கை -

KOHA JPL

<u>உள்ளடக்கம்</u>

அறிமுகக்குறிப்பு - 1990 ஜூலை பதிப்பிற்கு

அறிக்கை

அறிமுகம்
செ.சி.ச.க.யினதும் ஜெனீவா ஒப்பந்தங்களினதும் ஊற்றுவாய்.
செ.சி.ச.க.யின் பங்களிப்பு.
செ.சி.ச.க.யினது அந்தரங்கம்.
உள்நாட்டு மோதலின் சூழ்நிலைக்கான பிரயோகத்திறன்.
ஆயுதமேந்திய எதிர்க் குழுக்களும் மனிதநேய நியதிகளினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.
கருத்துவேறுபாடுள்ள குழுக்கள் உள்நாட்டு அந்தஸ்தைப் பெறுகின்றன.
"உள்நாட்டுச்" சூழ்நிலைகளில் செ.சி.ச.க. பணிபுரிகிறது - சில உதாரணங்கள்.
இலங்கைச் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான செ.சி.ச.கயின் அம்சங்கள்

அனுபந்தங்கள்

1, ஜெனீவா ஒப்பந்தத்தின் பொதுவிதிப்பிரிவு 3.
*2. இலங்கை சம்பந்தமான செயற்பாடுகள் - செ.சி.ச.க.யின் வருடாந்த அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட சுருக்கக் குறிப்புகள்.
*3. வேறிடங்களில் "உள்நாட்டுச்" சூழ்நிலையில் செ.சி.ச.க.யினது செயற்பாடுகள் - சில உதாரணங்கள்.
4. பாதுகாப்பற்ற நபர்களுக்கெதிரான வன்முறைச் செயற்பாடுகள். செ.சி.ச.க.வெளியீட்டிலிருந்து ஒரு பகுதி.
*5. ஆயுத முரண்பாடுகளின்போது சர்வதேச மனிதநேய அடிப்படை விதிகளின் திரட்டு.
*6. ஜெனீவா ஒப்பந்தங்களுக்கான மேலதிக முதற்குறிப்பு (உள்நாட்டு ஆயுதமுரண்பாட்டுச் சூழ்நிலை சம்பந்தமானது).
*7. ஜெனீவா ஒப்பந்தங்களினது ராஜ்யங்களின் தரப்பினையும் மேலதிக முதற்குறிப்புகளையும் காட்டும் பட்டியல்.
*8. ஒப்பந்தங்களைப் பரவலடையச்செய்வதற்கான ராஜ்ய தரப்புகளின் கடப்பாடுகள்.
*9. செ.சி.ச.க.யின் பணிகுறித்து ஜ.உ.பா.இ.தினால் விவாதிக்கப்பட்ட அறிக்கைகள், வேண்டுகோள்கள், குறிப்புகள், ஏனைய பிரசுரங்கள் என்பவைபற்றிய பட்டியலும் இலங்கையில் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கோட்பாடுகளைப் பிரயோகிக்கச் செய்வதற்கான தூண்டலும்.

---

* இப்பதிப்பில் நீக்கப்பட்டுள்ளன.

ஆங்கில மொழியிலுள்ள பிரதிகளை ஜ.உ.பா.இ.லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

80779

PUBLIC LIBRARY
JAFFNA

80779 C.C

முரண்பாடுகளின் தன்மை மாற்றமடைந்ததின் விளைவாக, செ.சி.ச.க, யினது அக்கறையானது சர்வதேச முரண்பாடுகளை மட்டுமன்றி முன்னெப்பொழுதையும்விட அதிக அளவிலான, படுமோசமான சர்வதேசத் தன்மையற்ற முரண்பாடுகளையும் உள்நாட்டுக் குழப்பங்களையும் பதட்டங்களையும் நோக்கியும் இப்பொழுது திசை திரும்பியுள்ளது. இத்துடன், முரண்பாடுகளின் சித்தாந்தக் குணாம்சம், கொரில்லா உத்திகள், பேரழிவு ஆயுதங்கள் என்பவை அதிகரித்துவருவதும். நவீன முரண்பாடுகளின் குவிமையம் மூன்றாம் உலகைநோக்கி மாற்றப்பட்டுள்ளமையும் மனிதநேயச் செயற்பாடுகளுக்கு புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. சிறிதேனும் நிலையற்ற சூழலில் வாழும் நிர்ப்பந்தத்திற்குள் மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள், இவ்வாறான முரண்பாடுகளால் வாழ்க்கைச் சமநிலை கொடூரமானமுறையில் ஈடாட்டங் கண்டுள்ளது. அத்தியாவசிய பொருட்கள், குறிப்பாக மக்கள் உடம்பொடு உயிர்தங்க உறுதிப்படுத்தவல்ல உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் போன்றவை மிகவிரைவில் அருந்தலானவையாகிவிடுகின்றன.

-செ.சி.ச.க. ஆண்டறிக்கை 1985-

## ஜூலை 1990 பதிப்பிற்கு

## அறிமுகம்

செஞ்சிலுவை சர்வதேசக் கமிட்டி என்றால் என்ன? அது எதனைச் செய்கிறது, எதனைச் செய்யவில்லை?

இன்று, எமது நாடு மீண்டும் ஒருமுறை வன்முறைப்போரில் மூழ்கியிருக்கும் போது, இதன் விளைவாக பயங்கர அழிவுகளும் மக்கள் படுந் துயரங்களும் மேலோங்கியிருக்கும்போது இக் கேள்விகளுக்கான பதில்களின் தெளிவான மதிப்பீடொன்றை நாங்கள் பேணவேண்டியது முக்கியமாகும்.

ஒவ்வோர் நிறுவனமும் தனக்கெனச் சொந்தமான தனித்துவமான நோக்கத்தையும் நிபுணத்துவத்தையும் கொண்டுள்ளது. இவற்றில் ஏனையோரிலும் பார்க்க வெற்றிகரமாக இயங்கியவை தாம் தேர்ந்தெடுத்த துறை வரம்பினுள்ளேயே வழக்கமாக செயற்பட கவனமெடுத்து வருகின்றன. அவை எதனைச் செய்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளனவோ அதில் அவை காத்திரமாயிருப்பதற்கு விரும்புகின்றன. ஏனைய துறைகளிலுள்ள பிரச்சனைகளின் பாரதூரத்தால் இவை ஈர்க்கப்படவில்லை என்பதல்ல இதன் பொருள், ஆனால் சில பிரச்சனைகள் கூடிய பொருத்தமான முகவரகங்களினால் தீர்த்துவைக்கப்பட வேண்டுமென்ற நடைமுறைச் சித்தாந்தத்தினை அவை உணர்ந்துள்ளமையே இதற்குக் காரணமாகும். செ.சி.ச.க. இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

இலங்கையில் செ.சி.ச.க. யின் பிரசன்னம் கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் ஸ்தாபிதமாயிற்று. தென் பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியினரின் (ஜே.வி.பி.) வன்முறைகள், இவற்றிற்கு அரசாங்கத்தின் எதிர்வினைகள் என்பவற்றிலிருந்து எழும் பிரச்சனைகளைப் பொறுத்து இது தனது பாரம்பரிய செயற்பாடுகளை ஆற்ற ஆரம்பித்தது. இந்திய அமைதி காக்கும் படை (ஐ.பி.கே.எஃப்.) வாபஸ் பெற்றதன் பின்னர் வடக்கிலும் கிழக்கிலும் உருவாகிய சூழ்நிலையுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளிலும் இது ஈடுபட ஆரம்பித்தது. இப்பொழுது எமது சமுதாயத்தை பீடித்துள்ள முரண்பாடு, பேரழிவு என்பவற்றின் காட்சிப் புலத்தில் செ.சி.ச.க. பிரதான பாத்திரமாகத் திகழ்கிறது. இதன் பங்களிப்பின் தெளிவான புரிந்துணர்வு எமக்கு அவசியமாகும்.

செ.சி.ச.க. என்ன செய்கிறது என்பதனை நாங்கள் அறிந்துகொள்ளும்பொழுதே அதன் பிரசன்னத்திலிருந்து அதியுயர் நன்மையைப் பெற்றுக் கொள்ளலாம், இது தனது மனிதநேயச் செயற்பாடுகளை காத்திரமாக ஆற்றுவதற்கு சம்பந்தப்பட்ட சகல தரப்புகளினதும் - அவை அரசாங்க

அதிகாரபீடங்களாக இருக்கலாம், அரசாங்கச் சார்பற்ற ஸ்தாபனங்களாக இருக்கலாம் அல்லது பெருமளவிலான பொதுமக்களாக இருக்கலாம்- முழுமையான ஒத்துழைப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். அது எதனைச்செய்யாது அல்லது எதனைச்செய்ய முடியாது என்பதனை அறிந்துகொண்டவுடன் தவறான எதிர்பார்ப்புக்களில் பிரவேசிப்பதனை நாங்கள் தவிர்த்துக் கொள்ளலாம், யதார்த்தத்திற்கொவ்வாத கோரிக்கைகளை விடுவிப்பதன் மூலம் எமது நேரத்தை அல்லது செ.சி.ச.க.யின் நேரத்தை வீணடிப்பதை விலக்கிக்கொள்ளலாம். இத்துடன், செ.சி.ச.க.யின் வரம்பெல்லைக்குள் அமையாத, இலங்கையில் ஏற்பட்டுள்ள பயங்கரமான முரண்பாட்டின் முக்கியமான தோற்றப்பாடுகளுக்கான தீர்வுகளைக் காண்பதற்கு எமது சக்தி வாய்ந்த முயற்சிகளை வேறெங்காவது கட்டாயம் நாங்கள் பிரயோகிக்க வேண்டுமென்பதை அறிந்துகொள்வோமென்பது மேலும் பிரதானமானதாகும்.

ஆகவே, இந்தச் சூழ்நிலையில்தான் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கமானது இலங்கைக்குப் பொருத்தமான ஜெனீவா ஒப்பந்தங்களினதும் செ.சி.ச.க.யின் செயல்கள் பற்றியதுமான தனது அறிக்கையினை மீண்டும் அச்சிடுவதெனத் தீர்மானித்தது. இந்த அறிக்கை 1987 ஜூலை மாதத்தில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைசாத்திடுவதற்கு முன்னர் எழுதப்பட்டது. அக்காலப்பகுதியில் இதன் நோக்கம், எமது நாட்டில் தனது பாரம்பரிய மனிதநேயச் செயற்பாடுகளை ஆற்றுவதற்கான செ.சி.ச.க.யின் கோரிக்கையை அரசாங்க அதிகார பீடங்களும் பொதுமக்களும் ஏற்றுக்கொள்ளுமாறு தூண்டுவதாகவே இருந்தது. தற்போதைய சூழ்நிலைக்கு உகந்தமுறையில் இதனை மாற்றியமைப்பதே இப்பொழுது இந்த அறிக்கையை மீள எழுதுவதன் நோக்கமாக உள்ளது. காலத்தின் நிர்ப்பந்தமும் மனிதவளப் பற்றாக்குறையும் உரியமுறையில் இதனைச் செய்வதற்கு எமக்கு இடந்தரவில்லை. இருந்தபோதிலும் இப்போதுள்ள நிலையில் இந்த அறிக்கையானது விடயத்தின் அடிப்படைகளை உபயோகமான முறையில் அறிமுகப்படுத்துமென்றும், இதனை வாசிப்பவர் இதன் அவசியமான அம்சங்களை நடைமுறைச் சூழலில் பிரயோகித்துப் பார்ப்பதற்கு இது தயாரான நிலையில் உள்ளதென்றும் நாம் உணர்கிறோம். அறிக்கையின் பிற்சேர்க்கையினையும் சில அனுபந்தங்களையும் நாங்கள் செம்மைப்படுத்தியுள்ளோம். இரண்டு புதிய அனுபந்தங்களைச் சேர்த்துள்ளோம், ஏனையவற்றை நீக்கியுள்ளோம். ஒரு புதிய அனுபந்தம் "பாதுகாப்பற்ற நபர்களுக்கு எதிரான வன்முறைச் செயற்பாடுகளின்போது" செ.சி.ச.க.வின் பங்களிப்பையும் இன்று எமக்கு அது விசேஷமாகப் பொருத்தமாயிருப்பதையும் விபரித்துக்கூறுகிறது.

முடிவுரை கூற முன்னர், செ.சி.ச.க.யின் செயலாற்றும் பாணி பிரசார நோக்கு இல்லாததென்பதையும் பகட்டுக்கள் அற்றதென்பதனையும் நாங்கள் கட்டாயம் வலியுறுத்தியேயாகவேண்டும். மெச்சத்தகு சில பல காரணங்களுக்காக அது தனது அந்தரங்க அறிக்கைகளை அரசாங்கத்திற்கு மட்டுமே அனுப்பி-வைக்கிறது. இதன் பணிகளிற் பெரும்பாலானவை வெளியிடப்படுவதேயில்லை. இதன் நடைமுறைச் செயற்பாடுகளைப்பற்றி எங்களால் வெளியிடப்படும் குறிப்புகள் வெகுஜன ஊடக அறிக்கைகளை அல்லது செ.சி.ச.க. யினால் வெளியிடுவதற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

உலகின் பல்வேறு பகுதிகளில் செ.சி.ச.க.யின் பணிகளை ஆராய்ந்து பார்த்தபோது இவைபற்றி ஏராளமான விபரங்கள் கூறப்படாதிருப்பதனை நாங்கள் அறிந்துகொண்டோம். செ.சி.ச.க. தனது முயற்சிகளுக்கான பலன்களைமட்டுமே எதிர்பார்க்கிறது, பொதுமக்களின் புகழுரைகளையோ, பாராட்டுதல்களையோ, ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. அதுவே முறையான கண்ணோட்டமாகும். இது மனிதநேய, மனித உரிமைகளுக்கான ஸ்தாபனங்களின் உயர்வான பாரம்பரியத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

செ.சி.ச.க.யானது விமர்சனங்களையும் எதிர்நோக்கி வருகிறது, இதன் செயற்பாட்டுத்திட்டங்கள் போதியளவு கிரகித்துக்கொள்ளப்படாத அடிப்படையில் சிலவேளைகளில் நல்லெண்ணம்படைத்த சிலர் அதிருப்தி தெரிவிக்க இடமுண்டு. அரசாங்கத்தின் விரோதிகளோ, மனித உரிமைகள் அரசாங்கத்தினால் தொடர்ந்து மீறப்படுவதற்கு இது துணைபோவதாகக் குற்றஞ்சாட்டக்கூடும். அரசாங்கத்தின் ஆதரவாளர்களோ "எம்முடன் இல்லாதவர்கள் எமக்கு எதிரானவர்கள்" என்பதன் அடிப்படையில் மோதல்கள் நிகழும் சூழ்நிலையில் செ.சி.ச.க.யானது நடுநிலைமை விதிகளைக் கறாராகக் கடைப்பிடிப்பதை வரவேற்காமலிருக்கவுங்கூடும். 125 ஆண்டுகால அனுபவத்தைக் கொண்டுள்ள செ.சி.ச.க. இவ்வாறான விமர்சனங்களால் செயலூக்கமிழந்துவிடாமலிருப்பதும் தனது கடினமான, அபாயகரமான பணிகளிலிருந்து விலகியொதுங்கிவிடாமலிருப்பதும் எமது நாட்டு மக்களின் நல்லதிர்ஷ்டமென்றே கூறவேண்டும். எமது சொந்த நலன்களுக்காக, இந்த அற்புதமான நிறுவனத்தின் பங்களிப்பையும் செயன்முறைகளையும் மேலும் பரவலாகப் புரிந்துகொள்ளச்செய்வதன்மூலம் உதவிபுரியலாம்.

சூரியா விக்கிரமசிங்கா
23 ஜூலை 1990

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

80779

## இலங்கையில் தற்போதுள்ள சூழ்நிலைக்குப் பொருத்தமான ஜெனீவா ஒப்பந்தங்களும் செஞ்சிலுவையின் சர்வதேசக் கமிட்டியும்.

-ஐ.உ.பா.இ.அறிக்கை-

### அறிமுகக் குறிப்பு

செஞ்சிலுவையின் சர்வதேசக் கமிட்டியானது குடியியல் யுத்தங்கள், உள்நாட்டுக் கலவரங்கள் உட்பட்ட ஆயுத மோதல்களின்போது மனிதநேய விவகாரங்களில் அங்கீகாரம்பெற்ற நடுநிலைவாய்ந்த மத்தியஸ்தரென்ற ஒப்பற்ற ஸ்தானத்தை நீண்டகாலமாக பெருமையுடன் வகித்துவருகிறது. 1959ம் ஆண்டுமுதல் இலங்கையும் ஒரு தரப்பாக இடம்பெற்றுள்ள ஜெனீவா ஒப்பந்தங்களில் இதற்குத் தெளிவான அந்தஸ்த்தொன்று வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் துயர்மிகுந்த சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அங்கத்துவ நாடுகள் இவ்வாண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்ற தமது 43வது அமர்வின்போது "உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனிதநேயச் சட்டத்தின் விதிகளை சகல தரப்பினரும் குழுக்களும் முழுமையாக மதித்து நடக்கவேண்டும்," என அழைப்பு விடுத்ததுடன்,

> "பாதிக்கப்பட்ட சகல தரப்புக்களைச் சேர்ந்தவர்களுக்கும் உதவிகளும் பாதுகாப்பும் வழங்குவது உட்பட மனிதநேய நியதிகளைப் பாதுகாக்கும் தனது செயற்பாடுகளைப் பூரணப்படுத்துவதற்கு செஞ்சிலுவையின் சர்வதேசக் கமிட்டியின் சேவைகளுக்கு வாய்ப்பளிப்பதற்குச் சாதகமான நிலையைக் கருத்திலெடுத்துக்கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்தை வேண்டியுங் கொண்டது."

இது செ.சி.ச.க.யானது யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியும் பாதுகாப்பும் வழங்கும் தனது பாரம்பரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பளிக்குமாறு மீண்டும்மீண்டும் பல்லாண்டுகள் இலங்கை அரசாங்கத்திற்கு வேண்டுகோள்விடுத்துவந்ததைத் தொடர்ந்ததாகும். செ.சி.ச.க.யின் பங்கு அதன் இயல்பு, அதன் பிரசன்னத்தை ஏற்றுக்கொள்ளுந்தாற்பரியம் என்பவை பற்றிய தப்பபிப்பிராயங்களின் காரணமாகவே கடந்தகாலத்தில் இவ்வேண்டுகோள்களெல்லாம் மறுக்கப்பட்டுள்ளனவென்று தோன்றுகிறது. இவை தெளிவுபடுத்தப்படவேண்டியவையாகும். இதற்கும் மேலாக இலங்கையில் மனித உரிமைகள், நீதி, சமாதானம் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ள சகல குழுக்களும் செ.சி.ச.க.யின் செயற்பாடுகளுடன் தம்மைப் பழக்கப்படுத்திக்கொள்வதுடன், ஆயுத மோதல்களின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலை வழங்குவதில் சிறப்புமிகு நிபுணத்துவம்பெற்ற நடுநிலையான, மனிதநேயமுள்ள இந்த அமைப்பின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளவேண்டுமென அரசாங்கத்தை வலியுறுத்தவேண்டும்.

<u>செ.சி.ச.க. வினதும் ஜெனீவா ஒப்பந்தங்களினதும் ஊற்றுவாய்</u>

செ.சி.ச.க..க்கு இப்பொழுது சுமார் நூற்றிருபத்தைந்து வயதாகிறது. இது அரசாங்கச் சார்பற்றது, அரசியற் சார்பற்றது. ஐரோப்பாவில் 19ம் நூற்றாண்டின் யுத்தகளங்களில் நிகழ்ந்த படுகொலைகள், மோசமாக காயமடைந்த போர்வீரர்கள் கவனிப்பாரற்று, கைவிடப்பட்ட நிலையில் மரணத்தை நிச்சயமாக எதிர்நோக்கிக்கொண்டிருந்தமை போன்ற மனதை உருக்கும் நிகழ்வுகளினாலேயே இது தோற்றம்பெற்றது. செ.சி.ச.க.யின் ஸ்தாபகர்கள் தாங்கள்மட்டும் நிவாரணவேலைகளை ஏற்பாடு செய்வதுடன் நின்றுவிடவில்லை; படுகாயமுற்ற, நோயுற்ற போர்வீரர்கள் -- அவர்கள் எந்தத் தரப்பினைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களை மீட்டுப்பராமரிப்பதற்கு குறித்த குறைந்தமட்ட நியதிகளுக்கேனும் அரசாங்கங்களை இணங்கச்செய்யும் வரலாற்றுப்புகழ்மிக்க சாதனையையும் மேற்கொண்டுள்ளார்கள். இந்த ஒப்பந்தங்கள் பின்னர் கடல் யுத்தங்களின் போது பாதிக்கப்படுபவர்களையும் யுத்தக் கைதிகளையும் யுத்தத்தினால் பாதிக்கப்படும் குடிமக்களையும் உள்ளடக்கும்வகையில் விஸ்தரிக்கப்பட்டது. <u>சர்வதேச மனிதநேயச் சட்டங்கள்</u> என்று அறியப்பட்ட இந்தச் சட்டங்கள் முழுவதும் இப்பொழுது 1949ம் ஆண்டின் நான்கு ஜெனீவா ஒப்பந்தங்களிலும் 1977ம் ஆண்டின் ஒப்பந்தத்திற்கான முதற்குறிப்பு என்று அறியப்பட்ட இரண்டு மேலதிக ஒப்பந்தங்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரசாங்கச் சார்பற்ற, மனிதநேய ஸ்தாபனமான செ.சி.ச.க. யானது ராஜியங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய சர்வதேச சட்ட முறைமையொன்றினைக் கொணர்ந்ததன்மூலம் அற்புதமான சாதனையொன்றினைப் படைத்துள்ளது. அதையடுத்து ஜெனீவா ஒப்பந்தங்களும் செ.சி.ச.க.வின் பங்கும்யுத்த காலங்களின்போது எத்தன்மைவாய்ந்தவை என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

<u>செ.சி.ச.க.யின் பங்கு</u>

ஒரு நடுநிலையான, தனியார் ஸ்தாபனமென்ற வகையில் இதன் உறுப்பினர்கள் யாவரும் சுவிஸ் பிரஜைகளாக உள்ளார்கள்; ஜெனீவா ஒப்பந்தங்களின் முன்னெடுப்பாளரான செ.சி.ச.க. இதில் கைச்சாத்திட்டுள்ள அரசுகளினால் இவை முறையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பினையும் கொண்டுள்ளது. இத்துடன், இதன் நடுநிலைத் தன்மைகாரணமாக, மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்களின் நன்மைக்காக யுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இது அற்புதமான சேவைகளை வழங்கிவருகிறது.

முதலாவதாக ஆயுதப் படைகளைச் சேர்ந்தவர்கள், யுத்தக் கைதிகள் ஆகிய வர்களில் காயமடைந்தவர்கள், சுகயீனமுற்றவர்கள், கப்பல்விபத்துக்குள்ளானவர் கள் போன்றோர் கைதுசெய்யப்பட்டு விடுதலையாகும்வரை செ.சி.ச.க. யானது உதவிவழங்கிவருகிறது. இத்தேவைகளின் பொருட்டு கலவரங்கள் நிகழு மிடங்கள், தடுத்துவைப்புக்கள், யுத்தக் கைதிகளாகப் பிடித்துவைக்கப்பட்டுள்ள வர்கள் இருக்குமிடங்கள் போன்றவற்றிற்கு விஜயஞ்செய்யும்பொருட்டு இதன் தூது வர்கள் உலகம் முழுவதற்கும் அனுப்பிவைக்கப்படுகிறார்கள், இவர்கள் பொருத்த மான இடங்களில் அவசியமான சீர்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு அதிகாரத்தில் உள்ளவர்களை அணுகுவார்கள்.

அத்துடன் செ.சி.ச.க.யானது எதிரிகளின் பிராந்தியத்திற்குள் அல்லது ஆக்கி ரமிக்கப்பட்ட பிரதேசங்களுக்குள் குடிமக்களின் சார்பிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். சர்வதேச ஆயுதமுரண்பாடுகள் அற்ற நிகழ்வுகளின்போது இது ஒரு நடுநிலைவாய்ந்த மத்தியஸ்தரென்ற முறையில் தனது கடமைகளை நிறை வேற்றும் (1949ம் ஆண்டின் நான்கு ஜெனீவா ஒப்பந்தங்கள் முழுவதற்கும் பொது வாக, விதிப்பிரிவு 3ற்கிணங்கமாக). காணாமற்போனவர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதும் ஆயுத மோதல்களினால் பிரிக்கப்பட்ட மக்களுக்கிடையில் குடும்பச் செய்திகளைப் பரிமாறிக்கொள்வதும் செ.சி.ச.க.யினது பிறிதொரு முக்கிய செயற்பாடாகும். செ.சி.ச.க.யினது மத்திய தேடுதல் நிலையமானது கடந்த 100 ஆண்டு காலப்பகுதியில் தனது கோவைகளில் 550 இலட்ச விபர அட்டை களைச் சேகரித்துவைத்துள்ளது, 300 இலட்ச தனிநபர் வழக்குகளில் பிரசன்ன மாகியிருந்தது.

இறுதியாக, யுத்தத்தினால் பட்டினிநிலைக்குத் தள்ளப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் செ.சி.ச.க.யானது அழைக்கப்படலாம். முள்ளுக் கம்பி வேலிகளுக்கூடாகவும் முற்றுக்கையிடப்பட்ட இடங்களுக்கூடாகவும் செல்லத் தக்க, ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் சுதந்திரமாக நடமாடத்தக்க ஒரே யொரு அமைப்பாக இருப்பதினால செ.சி.ச.க.யானது பாதிக்கப்பட்டவர் களுக்கு உணவுவகைகளையும் மருந்துவகைகளையும் உடுதுணிகளையும் எடுத்துச் செல்கிறது.*

இப்பிரதேசங்களிலெல்லாம் தேசியஇனம், நிறம், சமூக நிலைபாடு, அரசியற் கருத்துபோன்றவற்றிற்கு அப்பால்நின்று தனிநபர்களின் தேவைகளுக்கு ஏற்ப செ.சி.ச.க.உதவிகளை வழங்கிவருகிறது. மதம், அரசியல், இனம் என்பவை குறித்த விவாதங்களில் இதன் உறுப்பினர்கள் பங்குகொள்வது தடைசெய்யப் பட்டுள்ளது.

## செ.சி.ச.க.யின் பணியினது அந்தரங்கத்தவம்

மனித உரிமைகள் மீறப்படுவதை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தும் பணியில் செ.சி.ச.க.ஈடுபட்டிருக்கவில்லை. தான் விஜயஞ்செய்ய அனுமதிவழங்கப்படும்

* இந்தப் பந்தியானது "சர்வதேச மானுடநேயச் சட்டத்தின் உற்பத்தியும் அபிவிருத்தியும்" என்ற நூலிலிருந்து பெறப்பட்டு மீள்பிரசுரம்செய்யப்படுகிறது. பிராங்கோயிஸ் போரி வெளியீடு, செ.சி.ச.க. 1982.

நாடுகளில் தன்னால் கண்டறியப்பட்டவைபற்றிய அறிக்கைகளை இது வெளியிடு வதுமில்லை. மோதல்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு நடைமுறை நிவாரணத்தி தினை வழங்குவதே இதன் பிரதான இலக்காக உள்ளது. இது தனது பாரம் பாரிய பணிகளை பகுத்தறிவுள்ள முறையில், உயர்ந்த தொழில்முறைத் திறனுடன் பயிற்றப்பட்டரீதியில், அரசியல் விவாதங்களைத் தவிர்த்துக்கொண்டு நிறை வேற்றிவருகிறது. சம்பந்தப்பட்ட அரசாங்கங்களுக்குமட்டுமே இது அறிக்கை செய்கிறது. இவற்றைச் செய்வதன்மூலமும், தனது கண்டறிதல்களை "பகிரங் கப்படுத்தாதிருப்பதன்மூலமும்" கைதிகளினதும், இன்னும் பலரினதும் நிலைமை களை மேம்படுத்த அரசாங்கங்களைச் சிறந்தமுறையில் தனது செல்வாக்கிற் குட்படுத்தமுடியும். பாரிய வன்முறைகள் திரும்பத்திரும்ப நிகழும் அரிய சந்தர்ப்பங்களில் மட்டுமே செ.சி.ச.க. இந்த விதிகளிலிருந்து விலகிச் செல்லும்.

உள்நாட்டு முரண்பாட்டுச் சூழலுக்கான பிரயோகத்திறன்.

"....உள்நாட்டு மோதல்களினால் பாதிக்கப்படுபவர்களுக்கு உதவி யளிப்பதற்கு செஞ்சிலுவை நீண்டகாலமாகவே முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது, இவற்றின் பயங்கரங்கள் சிலவேளைகளில் சர்வதேச யுத்தங் களைவிட மிகக்கொடூரமானவையாக உள்ளன, ஏனெனில் இவைகள் ஏற் படுத்தும் சகோதரப்படுகொலை வெறிகள் படுமோசமானவையாக இருக்கின்றன."*

ஜெனீவா ஒப்பந்தங்கள் சர்வதேச முரண்பாட்டுச் சூழலில்மட்டுமே பிர யோகிக்கப்படக்கூடியவை என்ற தவறான நம்பிக்கை இலங்கைக்கு செ.சி. ச.க.யினை அழைப்பதற்கான பரிந்துரைகளை நிராகரிப்பதற்கான கார ணங்களில் ஒன்றாக இருந்திருக்கலாம்.

எவ்வாறிருந்தபோதிலும், ஜெனீவா ஒப்பந்தங்கள் பொதுவான விதிப்பிரிவு 3 இனைக் கொண்டுள்ளன, இது உயர் முரண்பாடுகளைக்கொண்ட தரப்புகளில் ஒன்றின் நிலப்பரப்பில் நிகழும் "சர்வதேச குணாம்சத்தினைக் கொண்டிராத ஆயுத மோதல்கள்" பற்றி தெளிவாகவே எடுத்துக்கூறுகிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் இவ்விதிப்பிரிவு மிகப் பாரிய முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது, ஜெனீவா ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டவர் என்றவகையில் இது இலங்கையையும் கட்டுப்படுத்துகிறது. உள்நாட்டு ஆயுத மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்களைப் பொறுத்தமட்டில் மிகக்குறைந்தபட்சம் சில விதி முறைகளேனும் கடைப்பிடிக்கப்படவேண்டுமென பொது விதிப்பிரிவு 3 கூறுகிறது. ஜெனீவா ஒப்பந்தங்களின் ஏனைய பகுதிகளையும் நடைமுறைப்படுத்தவேண்டு மென்று மோதல்களில் ஈடுபட்டுள்ள தரப்புக்களை இது வலியுறுத்திவருகிறது.

---

* நான்காவது ஜெனீவா ஒப்பந்தத்திற்குப் பொழிப்புரை, ஜீன்பிக்ரெற், ஜெனீவா செ.சி.ச.க. 1958.

"செஞ்சிலுவையின் சர்வதேசக் கமிட்டியினைப் போன்றபாரபட்சமற்ற மனித நேய அமைப்பொன்று மோதல்களில் ஈடுபட்டுள்ள தரப்புகளுக்கு தமது சேவைகளை வழங்கலாம்" என்று இது கூறுகிறது. இந்த "முன்னெடுப்பு உரிமை" (இவ்வாறுதான் இது அழைக்கப்படுகிறது) பல்லாண்டுகளாக செ. சி.ச.க.வினால் நடைமுறைக்குட்படுத்தப்பட்டுவருகிறது, பல அரசாங்கங் கள் இதற்கு உற்சாகமூட்டத்தக்கவகையில் நடந்துகொள்கின்றன. இவற்றிற்கு பல முக்கியமான உதாரணங்கள் பிற்பகுதியில் தரப்பட்டுள்ளன. (உள்நாட்டு ஆயுத முரண்பாட்டுச் சூழ்நிலை சம்பந்தமாக மேலும் விபரமான விதிப் பிரிவுகள் 1977ன் மேலதிக ஒப்பந்தமுற்குறிப்புகளில் தரப்பட்டுள்ளன, ஆனால் இலங்கை இதுவரை இந்த மேலதிக ஒப்பந்தமுற்குறிப்புகளில் ஒப்ப மிடவில்லை. இதில் ஒப்பமிட இலங்கையைத் தூண்டவேண்டும், ஆனால் இது வேறொரு பிரச்சனையாகும்.)

<u>ஆயுதமேந்திய எதிர்க்குழுக்களும் மனிதநேய நியதிகளினால் கட்டுப்படுத்தப் படுகின்றன.</u>

சட்டரீதியான அரசாங்கங்கள் மட்டும் விதிப்பிரிவு 3 னால் கட்டுப்படுத் தப்பட்டுள்ளன என்பது மிகத் தெளிவாக உள்ளது. "மோதல்களில் ஈடுபட் டுள்ள ஒவ்வொரு குழுவும் இவற்றைப் பிரயோகிக்கக் கடமைப்பட்டுள்ளன." என்ற சொற்றொடரின் பொருள், ஆயுதமேந்திய எதிர்க் குழுக்களும் குறைந்தபட்ச மனிதநேயக் கோட்பாடுகளைக் கௌரவிக்க சமமான கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன என்பதாகும். இது ஒரு வரலாற்றுச் சாதனையாகும், ஜெனீவா ஒப்பந்தங்கள் பற்றிய தரமிக்க வர்ணனையொன் றில் பின்வருவன கூறப்பட்டுள்ளன.

> "'ஒவ்வொரு தரப்பும்' என்ற சொற்கள் சர்வதேச சட்டத்தில் கடந்த சில ஆண்டுகளின் போக்கில் பெரும் முன்னேற்றத்தைச் சுட்டிக் காட்டி நிற்கின்றன. ஒப்பமிடாத தரப்பொன்றினை சர்வதேச ஒப்பந்த மொன்றின்மூலம் கட்டுப்படுத்துவதென்பது சட்டத்தில் இயலாதது என்று அண்மைக்காலம்வரை கருதப்பட்டுவந்துள்ளது - மேலும் இத்தரப்பானது இதுவரை இல்லாததொன்றாக, சர்வதேசக் கட்டுப்பாடுகளைப் பொறுப் பேற்கும் சட்டபூர்வ ஸ்தூல அமைப்பொன்றினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேவைப்பாட்டினைக்கூடக் கொண்டிராதவொன்றாக உள்ளது.

* * *

> கிளர்ச்சிக்காரர்களின் தரப்பொன்று மோதல்களினால் பாதிக்கப்பட்டவர் களுக்காக மிகச் சிறந்தமுறையில் விதிப்பிரிவு 3 இனைக் கடைப்பிடிக்குமே யானால் மிகவும் நன்று; யாருமே இதுகுறித்து முறையீடுசெய்யமாட்டார்கள். இத்தரப்பு இவற்றைக் கடைபிடிக்காதிருக்குமேயானால் இத் தரப்பின் செயற்பாடுகள் வழிப்பறித்தன்மைகொண்டவை அல்லது அராஜகமானவை என்று கூறுவது சரியான தென்பதை இதுவே நிரூபித்துவிடும்.

— ஜீன் பிக்ரெற்—

விதிப்பிரிவு 3 ன் இத்தோற்றப்பாடு அடிக்கடி கவனத்திற்கொள்ளாது விடப்படுகிறது, ஆனால் இதுவே "கிளர்ச்சித் தரப்புக்கள்" அடிப்படையான மனிதநேய நியமங்களை அடிக்கடி அலட்சியப்படுத்தும் பல நாடுகளில் தீர்க்க மானதாக உள்ளது. குறித்தசில ஆயுதமேந்திய எதிர்க் குழுக்கள் இவ்வாறான நியமங்களை ஏற்றுக்கொண்டமையும் செ.சி.ச.க.யுடன் ஒத்துழைத்துவந்தமை யும் செ.சி.ச.க. ஆண்டறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அநுபந்தம் 3ல் தரப்பட்டுள்ள எல் சல்வடோர், நிக்காராகுவா, உகண்டா ஆகிய நாட்டு நிகழ்வுகள்பற்றிய சுருக்கக் குறிப்புகளைப்பார்க்கவும்.

<u>கருத்துமுரண்பாடுள்ள குழுக்கள் சட்ட அந்தஸ்தினைப்பெறவில்லை.</u>

செ.சி.ச.க.யின் பிரசன்னம் த.ஈ.வி.பு. களுக்கு (அல்லது வேறெந்த ஆயுதமேந்திய பிரிவினைவாதக் குழுவிற்கு) சர்வதேச அங்கீகாரத்தை ஓரளவில் வழங்குமென்றோ அல்லது அவற்றிற்கு ஏதோ சில அந்தஸ்தை வழங்குமென்றோ கருதியமையே அதனை அழைக்காதிருந்தமைக்கான பிரதான காரணமாகும். இவ் வாறான அச்சங்கள் முற்றுமுழுதாக ஆதாரமற்றவையாகும். அரசாங்கத்தரப்பில் எழும் இவ்வாறான எந்தவொரு தப்பெண்ணத்தையும் நீக்குவதற்காக ஜெனீவா ஒப்பந்தத்தின் விசேட ஊரத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பொது விதிப்பிரிவு 3ன் கடைசி வசனம் எல்லாவற்றையும் விட மிகமுக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது, அது பின்வருமாறுள்ளது.

> "முன்கூறப்பட்ட விதிப்பிரிவுகளின் பிரயோகமானது மோதலில் ஈடுபட் டுள்ள தரப்புகளின் சட்டபூர்வ அந்தஸ்தினை எவ்வகையிலும் பாதிக்க மாட்டாது".

இது, அரசாங்கங்களினால் எழுப்பப்படும் அச்சங்களுக்குப் பூரணமான பதிலாக அமைகிறது.

இந்த விதிப்பிரிவுபற்றிய பிக்ரெற்றின் விளக்க உரைகள் பின்வரும் அவதானிப்பு களை உருவாக்குகின்றன.

<u>பந்தி 4 - மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரின் சட்ட அந்தஸ்தின் காக்கிரத்தன்மையின் போதாக்குறை</u>

இந்தச் சரத்து அத்தியாவசியமானது. இது இல்லாமல் விதிப்பிரிவு 3இனையோ அல்லது வேறெந்த விதிப்பிரிவினையோ நடைமுறைப்படுத்த முடியாது. ஒப்பந்தத்தை மிகக்குறைந்த மட்டத்திலாவது பிரயோகிப்பதென்பது உள்நாட்டு யுத்தம் ஏற்படும் பட்சத்தில் அதிகாரத்திலுள்ள அரசாங்கம் கிளர்ச்சியினை சட்டபூர்வமாக அடக்கு வதில் தலையீடுசெய்தல் அல்லது யுத்தத்தில் ஈடுபடுபவர்களின் அந்தஸ்தில் தலை யீடுதல், எதிர்த்தரப்பின்மீது அதிகாரத்தையும் வலுவினையும் அதிகரித்தல் போன்ற, எப்பொழுதும் ஒரேவகையில் இருந்துவரும் அச்சங்களை அகற்றுவதற்கு இச்சரத்து உதவும்.

*　　　*　　　*

1032 CC

ஒப்பந்தத்தின் இலக்குகள் தூய மானுடநேயமுடையதென்பதனையும், இது எந்த விதத்திலும் ராஜியங்களின் உள்விவகாரங்களில் அக்கறைகாட்டாதென்பதனையும், சகல இடங்களிலும் சகல சூழ்நிலைகளின்கீழும் யுத்தத்திற்கு வெளியேயும் யுத்தத்திற்கு அப்பாலும் செல்லுபடியாகத்தக்கதென சகல நாகரீகமடைந்த தேசங்களாலும் கருதப்படக்கூடிய மானிடவர்க்கத்தின் அத்தியாவசிய சட்டங்கள் சிலவற்றிற்கு மதிப்பளிப்பதை வெறுமனே உறுதிசெய்கிறதென்பதனையும் இது நிட்சயமாகத் தெளிவாக்குகிறது.

விதிப்பிரிவு 3 இனைக் கடைப்பிடிப்பதன்மூலம் ஆட்சியிலுள்ள அரசாங்கத்தினால் எதிர்த் தரப்பினர்மீது எவ்வகையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் எந்தவொரு அங்கீகாரத்தையும் பெற்றுவிடமுடியாது என்பது உண்மையானதாகும்; கிளர்ச்சியொன்றை, ஆயுதங்கள் உட்பட தனது சொந்தச் சட்டங்களினால் கூறப்பட்ட சகல ஏதுக்களினாலும் அடக்கிவிடும் அரசாங்கத்தின் உரிமையை இது எவ்வழியிலும் மட்டுப்படுத்திவிடவில்லை; எதிராளிகள்மீது வழக்குத் தொடர்தல், அவர்கள் இழைத்த குற்றத்திற்காக தனது சொந்தச் சட்டங்களுக்கிணங்க அவர்களுக்குத் தண்டனை வழங்கல் என்பவற்றிற்கான அரசாங்கத்தின் உரிமையையும் இது எவ்விதத்திலும் பாதித்துவிடவில்லை.

இதே வழியில், எதிராளித் தரப்பினர் இவ் விதிப்பிரிவுகளைப் பிரயோகிப்பதனால் விசேஷ பாதுகாப்பினைப் பெறும் எந்த உரிமையையும் அல்லது எந்த விதிவிலக்கையும், இது எவ்வகையாக இருந்தாலுஞ்சரி, இதற்கு எப்பெயர் வழங்கினாலும் அல்லது கோரினாலுஞ்சரி, பெற்றுவிடவேமுடியாது.

விதிப்பிரிவு 3, ஒப்பந்தத்தின் எஞ்சியபகுதிகளை ஒத்திருந்தபோதிலும் இது தனிநபர்களைப் பற்றியும் மானிடரென்றரீதியில், அவருடைய ஏனைய தாரதம்சங்களைக் கருத்திற்கொள்ளாமல் அவர் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய உடல்ரீதியான சிகிச்சைகளைப் பற்றியும் மட்டுமே அக்கறைகொண்டுள்ளது.

## <u>உள்நாட்டுச் சூழலில் செ.சி.ச.க.பணிகள் - சில உதாரணங்கள்</u>

உண்மையில், ஜெனீவா ஒப்பந்தங்களின் இத் தோற்றப்பாடானது பல நாடுகளினால் மிகச் சிறப்பாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. 1969ல் இதற்குமுந்திய பதினொரு ஆண்டுகள் நிகழ்த்தப்பட்ட தனது செயற்பாடுகள்பற்றி செ.சி.ச.க. மேற்கொண்ட ஆய்வுகள் உள்நாட்டுச் சூழ்நிலைகளின் விளைவாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள, சுமார் 100,000 நபர்களை, உறுதியாகக் கூறுமிடத்து இவர்களிற் பலர் "ஆயுத முரண்பாடுகள்" என்ற வகையறாவிற்குள் வராதிருந்தபோதிலும், சென்று பார்வையிடுவதற்கு 42 அரசாங்கங்கள் அதிகாரமளித்திருந்தன. மிக அண்மையில், 1985ம் ஆண்டில் செ.சி.ச.க. 80ற்கும் அதிகமான நாடுகளில் செயன்முனைப்பான பணிகளில் ஈடுபட்டிருந்தது. ஏனைய செயற்பாடுகளுக்கு

மத்தியிலும் இது 30,000ற்கும் அதிகமான யுத்த கைதிகளையும், "பந்தோபஸ்திற்காக காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள்" என்றழைக்கப்படுபவர்களையும் சென்று பார்வையிட்டிருக்கிறது, காணாமற்போனவர்கள் பற்றிய 27,506 வேண்டுகோள்களைப் பரிசீலித்துள்ளது (இதில் 7,249 பேர் இருக்குமிடங்களைக் கண்டறிந்துள்ளது).

இதே ஆண்டில் பல நாடுகள் தமது முரண்பாடுகளை உள்நாட்டு விவகாரங்களென்று உறுதியாகக் கருதியபோதிலும் செ.சி.ச.க. யினை தமது பிரதேசங்களில் செயலாற்றுவதற்கு அனுமதியளித்துள்ளன. ஆயுத முரண்பாடுகள் என்று கருதப்படாத ஆனால் "உள்நாட்டுக் குழப்பங்கள், பதட்டநிலைகள்" என்ற தன்மைகளைக்கொண்ட சூழ்நிலைகளும் இவற்றுள் அடங்குகின்றன. சிலி, எல் சல்வடோர், ஹெயிற்றி (டுவாலியரின் ஆட்சியின்கீழ்), மொஸாம்பிக், நிக்காராகுவா, பெரு, பிலிப்பைன்ஸ் (மார்க்கோஸின் கீழ்), தென்னாபிரிக்கா, ஸ்பெயின் (பாஸ்க் பிரிவினைவாதிகள் தொடர்பாக) உகண்டா, ஸையிரே போன்ற நாடுகள் இவற்றில் அடங்குகின்றன. மொஸாம்பிக்கை விதிவிலக்காகக் கொண்டு மற்றெல்லா நாடுகளிலும் "தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு" (அ-து, அவர்களைச் சென்று பார்ப்பதற்கு) செ.சி.ச.க.க்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது, இப்பணிகளின்போது குறைந்த பட்சம் அரைவாசிச் சந்தர்ப்பங்களில் காணாமற்போனவர்களைத் தேடும் செயற்பாட்டிலும் அது ஈடுபட்டிருந்தது. ஜனநாயகத்தன்மையும் மானிடநேயமும் எமது சொந்த நாட்டைவிட குறைவாக உள்ளதாக பொதுவாகவே கருதப்படும் அரசாங்கங்களைக் கொண்ட நாடுகளும் உள்ளன, இவையும் ஏனையவையும் உள்நாட்டு மோதல் நெருக்கடிகளின்போது எம்மைவிடத் திறமையுடன் ஒத்துழைப்பை வழங்கியுள்ளன. இவை யாவுமே ஜெனிவா ஒப்பந்தங்களின் தாற்பரியங்களைப் புரிந்துகொண்டு மனிதநேயப் பணிகளை ஆற்றுவதற்கு செ.சி.ச.க.க்கு அனுமதியளித்துள்ளன.

இஸ்ரேலிலும் ஆக்கிரமிக்கப்பட்ட குடியேற்ற பிரதேசங்களிலும் செ.சி.ச.க. தொடர்ச்சியாக ஆற்றிவரும் பணிகள் சுவையானவை. இங்கு இதன் செயற்பாடுகள் குடிமக்களின் பாதுகாப்புடன் தொடர்புடைய நான்காவது ஜெனிவா ஒப்பந்தத்திலேயே பிரதானமாகத் தளங்கொண்டுள்ளன. நான்காவது ஒப்பந்தம் தமக்குப் பொருத்தமானதல்ல என்று இஸ்ரேலிய அதிகாரிகள் தொடர்ந்து கூறிவருகின்றபோதிலும் அதன் குறித்த சில சரத்துக்களுக்கு ஒத்துழைப்பு நல்க அவர்கள் விரும்புகிறார்கள். இதன் விளைவாக, 1985 காலப்பகுதியில் செ.சி.ச.க. யினர் தமது பாதுகாப்புச் செயற்பாடுகளை இப்பிரதேசத்தில் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது, இச் செயற்பாடுகள், தீர்ப்பிற்காக அல்லது மரணதண்டனைக்காகக் காத்திருக்கும் 4000 கைதிகளைச் சென்று பார்வையிடுதல்,

விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள 1405 தடுப்புக்காவற்கைதிகளைப் பேட்டி காணுதல் என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளன. இது தடுத்துவைக்கப்பட்டுள் ளோரின் குடும்பங்களுக்கு உதவிவருவதுடன் இவர்களும் தடுத்துவைக்கப்பட்ட தமது உறவினரைச் சென்று பார்வையிடுவதற்கும் வசதியேற்படுத்திக் கொடுத் துள்ளது.

இந் நாடுகளில் செ.சி.ச.க. மேற்கொண்ட பணிகள்பற்றிய சில முக்கியமான விபரங்கள் அனுபந்தம் 3ல் தரப்பட்டுள்ளன. காயமடைந் தோருக்கு காத்திரமான மருத்துவ உதவி வழங்குதல், யுத்தத்தால் ஆற்ற லிழந்தோருக்கு நீண்டகால உதவிகளை வழங்குதல் போன்ற செ.சி.ச.க. பணிகள் எம்மைப் போன்ற மூன்றாம் உலக நாடொன்றிற்கு குறிப்பாகப் பொருத்தமான உதாரணமாகத் திகழ்கின்றன.

ஜெனீவா ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தையும் பெறுமானத்தையும் பிர யோகத்திறனையும் சரியான முறையில் புரிந்துகொள்ளுவதற்கு சர்வதேச மனிதநேயச் சட்டத்தினை பரவலான முறையில் அறியச்செய்தல் அவசியமான தென்பது தெளிவானதாகும். இதனை அடைவதற்கு தொடர்ந்து மேற்கொள் ளப்பட்டுவரும் முயற்சிகளை செ.சி.ச.க.வின் வருடாந்த அறிக்கைகள் நன்கு பிரதிபலிக்கின்றன.

<u>இலங்கைச் சூழ்நிலைக்கு செ.சி.ச.க.யின் பொருத்தமானதன்மை</u>

இன்று இலங்கையில் நாங்கள் கொண்டுள்ள இடர்மிகுந்த சூழ்நிலையில் செ.சி. ச.க.யின் பணியின் பொருத்தமானதன்மையினை வலியுறுத்துவது அதி அவசர மான செயற்பாடாக உள்ளது; ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒப்புதல் வாக்கெடுப்பின்மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போதைய மோதல்கள் மிகமோசமான விஸ்தீரணங்களைப் பெற்றுள்ளன என்பது இப்பொழுது பரவலாகவே உணரப்படுகிறது. இது சமுதாயத்தின் பாரிய பகுதியினை விழுங்கியுள்ளது, போராளிகள் தரப்பிலும் குடிமக்களின் தரப்பிலும் பல்லாயிரக்கணக்கான உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தியுள்ளது பலரை வீடற்றநிலைக்குத்தள்ளி அநாதரவுநிலைக்குட்படுத்தியுள்ளது, நாட்டின் வளங்களை மனித வளங்களையும் பொருள் வளங்களையும், சூறையாடி நாட்டினை பேரி டர்நிலைக்கு ஆளாக்கியுள்ளது.

இப்பொழுது பல ஆண்டுகளாக யாழ்ப்பாண மாவட்டத்திலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஏனைய பிரதேசங்களிலும் வாழ்ந்துவரும் குடிமக்கள் பலர் பாதுகாப்புப் படைகளுக்கும் ஆயுதந்தரித்த பிரிவினைவாதக் குழுக்களுக்கு மிடையில் நடைபெற்றுவரும் யுத்தத்தின் இடைநடுவில் அகப்பட்டு வருகிறார்கள். பல குடிமக்கள் இதனால் தமது உயிர்களை இழந்துள்ளார்கள், ஏனைய பலர்

PUBLIC LIBRARY
JAFFNA
80779

கடுங்காயமுற்றுள்ளார்கள், இவர்களுடைய வீடுகளும் உடமைகளும் அழித்தொழிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் அடைக்கலம்புகுந்துள்ளார்கள், அத்தியாவசிய பொருட்களின் விநியோகமும் சுகாதார, மருத்துவ சேவைகள் உட்பட்ட அத்தியாவசிய சேவைகளும் சீர்குலைக்கப்பட்டுள்ளன. நூற்றுக் கணக்கான சந்தேக நபர்கள் இராணுவ முகாம்களிலும் தடுப்பு நிலையங்களிலும் வைக்கப்பட்டுள்ளார்கள், இங்கெல்லாம் சுகாதாரச் சீர்கேடுகளும் திருப்தியற்ற சூழ்நிலைகளும் நிலவுவதாகவும் மனதைப் புண்படுத்தும் இழிவான நிகழ்ச்சிகளும் சித்திரவதைகளுங்கூட மிக சாதாரண நிகழ்ச்சிகளாக இடம்பெற்றுவருவதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. ஏனைய பலர், சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள், அரசியல் குற்றங்களுக்கான விசாரணைகளுக்காகக் காத்திருப்பவர்கள் சிறைச்சாலைகளிலும் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் வைக்கப்பட்டுள்ள சூழ்நிலையும் கவனத்திற்கொள்ளக்கூடிய விஷயமாக உள்ளது. மிகப்பெரும் எண்ணிக்கையான மக்கள் "காணாமற்போய்விட்டதாகவும்", அல்லது "மறைந்துபோய்விட்டதாகவும்" அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாவர், இவர்களில் அநேகமானோர் நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்றனர். சிங்களவர், முஸ்லீம்கள் உட்பட ஏனைய சமூகங்களைச் சேர்ந்த குடிமக்களும் கிளர்ச்சிகாரர்களின் தாக்குதலுக்கு இலக்குகளாகியுள்ளார்கள், இவர்களும் மரணத்திற்கும் காயங்களுக்கும் இடப்பெயர்வுகளுக்கும் உடமையிழப்புகளுக்கும் ஆட்பட்டுள்ளார்கள், இவர்கள் தலைநகரான கொழும்பிலும் வெளிப்புற மாகாணங்களிலும் வாழ்ந்துவருபவர்களாவர். குடிமக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சனைகளுக்கு மத்தியில், காயமுற்ற இருதரப்புப் போராளிகளும் (குடிமக்களும்) உரிய நேரத்தில், பயிற்றப்பட்ட அவசரகால மருத்துவ உதவிகளைப் பெறுதல், திறனிழந்தோருக்கான ஆதரவையும் மருத்துவ உதவிகளையும் பெறுதல் போன்றவையும் இடம்பெற்றுள்ளன.

மோதல்களின் தன்மையும் பரவலும், சகல தரப்புகளிலும் இடர்ப்பாடுகளும், மனிதநேய முன்னெடுப்புகளுக்கும் தலையீடுகளுக்குமான அழுத்தமான தேவைப்பாடுகளும் சர்வதேச நடவடிக்கைகளின் நியதிகளுக்கமைவான உதவிகளைப் பெறுவது பற்றி இலங்கை அரசாங்கம் ஆலோசிப்பதற்கான நிர்ப்பந்தக் காரணிகளாக உள்ளன. இந்தவகையில், உதவிகளை வழங்கும் பொருட்டு அழைக்கப்படக்கூடிய மிகச்சிறந்த முகவர் செ.சி.ச.க.யினைத்தவிர வேறெதுவுமேயில்லை; மோதலில் ஈடுபட்டுள்ள சகல தரப்புகளினாலும் ஜெனீவா ஒப்பந்தங்களின் மனிதநேயக் கோட்பாடுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்பது இதன் அடிப்படைநோக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. எனவே செ.சி.ச.க.யின் பிரசன்னம் பிரிவினைவாதிகளின் அத்துமீறல்களையும், குறிப்பாக தரதிஷ்டம்வாய்ந்த குடிமக்கள்மீதான தாக்குதல்களையும், ஜெனீவா ஒப்பந்தங்களுக்கு ஒவ்வாத நடவடிக்கைகளையும் தடுத்துநிறுத்தவுங்கூடும். இதன் பிரசன்னம் மோதல்களின் விளைவாகத் துயருறும் பல்லாயிரக்கணக்கான இலங்கைமக்களுக்கு ஆறுதலையும் அமைதியையும் உதவியையும் கொணர்வதுமட்டுமின்றி, சகல சமூகங்

1032c

களையும் சேர்ந்த தனது பிரஜைகளைப் பாதுகாத்து உதவியளிக்கும் முயற்சியில் அரசாங்கத்தின் நல்லெண்ணத்தையும் நேர்மையையும் முக்கியப்படுத்துவதற்கும் உதவும்.

மானெல் பொன்சேகா
சூரிய விக்கிரமசிங்கா.

செயற்குழுவிற்கான அறிக்கை. 1987 ஜூலை 17ல் ஜ.உ.பா.இ.த்தின் செயற் குழுவினால் நிறைவேற்றப்பட்டு, ஐ.நா.தீர்மானங்களுக்கு அமைய நடந்துகொள்ளுமாறும் செ.சி.ச.க. யின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறும் அரசாங்கத்தினைத் தூண்டும் இணைப்பு அறிக்கையொன்றுடன் பொதுமக்கள் தகவற் சாதனங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

<u>பிற்சேர்க்கை</u>

1987, 1988, 1989 காலப்பகுதிகளில் செ.சி.ச.க. உதவி வழங்குவதற்கான தனது கோரிக்கைகளை மீண்டும் மீண்டும் சமர்ப்பித்துவந்துள்ளது. 1987 ஜூலை மாதத்தில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு வடக்கிலும் கிழக்கிலும் இந்திய அமைதிகாக்கும் படையினர் நிலைகொண்ட பின்னரும் இலங்கை நிகழ்வுகள்குறித்து அக்கறைகொண்டு இது தனது பணிகளை இங்கு ஆற்றும் பொருட்டு இந்திய அதிகாரபீடங்களை அணுகியது. (அநுபந்தம் 2ல் மறுபிரசுரஞ் செய்யப்பட்ட வருடாந்த அறிக்கைகளின் சாராம்சங்களைப் பார்க்க). முன்னர் வடக்கிலும் கிழக்கிலும் நிகழ்வுற்ற மோதல்கள் குறித்தே அது அக்கறைசெலுத்தியது, 1988லிருந்து தெற்கில் அதிகரித்துவந்த பதட்டநிலை, வன்முறை என்பவை குறித்தும் செ.சி.ச.க. அக்கறைகாட்டியது.

1989 அக்டோபர் 9ந்திகதி செ.சி.ச.க.யினை அதன் பாரம்பரிய மனிதநேயச் செயற்பாடுகளை இலங்கையில் ஆற்றவருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். ஒருவாரத்தின் பின்னர் நான்கு உறுப்பினர்களைக்கொண்ட தூதுக் குழு ஒன்று கொழும்பிற்குவந்து செ.சி.ச.க.யின் செயலகத்தைத் திறந்து வைத்தது. ஆண்டின் இறுதிப்பகுதியில் செ.சி.ச.க.அரசியற் கைதிகளைச் சென்று பார்வையிட்டது, காணாமற்போனவர்களைத் தேடியது, மருத்துவத் தேவைகளை மதிப்பீடுசெய்தது, சர்வதேச மனிதநேய விதிகள் பற்றிய தகவல்களை ஆயுதப் படைகளிடம் பரவச்செய்தது. நாட்டின் தென்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்தச் செயற்பாடுகள் செ.சி.ச.க. 1989 ஆண்டறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளன, இவற்றின் பொருத்தமான சாராம்சங்களை அநுபந்தம் 2ல் காணலாம்.

1990 மார்ச், எப்பிரல் மாதங்களில் இ.அ.கா.ப.வாபஸ் பெறப் பட்ட பின்னர் செ.சி.ச.க.யாழ்ப்பாணத்தில் தனது செயலகமொன்றைத் திறந்து வடக்கிலும் கிழக்கிலும் பணியாற்ற ஆரம்பித்தது. இதனை எழுதிக் கொண்டிருக்கும் காலப்பகுதியில், இப்பிரதேசங்களில் ஜூன் மாதத்தில் ஆயுத மோதல் வெடித்தெழுந்தபோது இதில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினருக்கும் இடையில் தொடர்புகளைப் பேணிவரும் நடுநிலைவாய்ந்த இடைத்தரகரின் பணி மேற் கொண்டு செ.சி.ச.க. செயற்பட்டு வருகிறது. சண்டை நடைபெற்று கொண்டிருக்கும் பகுதிகளினூடாக உணவுப்பொருட்கள், மருந்துவகைகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பண்டங்கள் என்பவற்றைக் கொண்டுசெல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், காயமுற்ற போராளிகளை வேறிடங்களுக்கு எடுத்துச் செல்லுதல், மருத்துவ சேவைகளுக்கும் இரு தரப்பிலும் கைதிகளிடம் விஜயஞ் செய்வதற்கும் மதிப்பளிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை நடாத்துதல் ஆகிய வற்றை இதன் செயற்பாடுகள் உள்ளடக்கியுள்ளன.

தற்போது சுமார் 40 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் (பிரதானமாக சுவிஸ் நாட்டவர்கள்) இதே எண்ணிக்கையான உள்ளூர்ப் பணியாளர்களுடன் சேர்ந்து இலங்கையில்செயலாற்றிவருகிறார்கள். செ.சி.ச.க.வின் தலைமைச் செயலகம் ரீட் அவெனியூ கொழும்பு 4 என்ற முகவரியில் அமைந்துள்ளது. அதன் கிளை நிலையங்கள் மாத்தறை, கண்டி, அநுராதபுரம், மட்டக்களப்பு, திருகோணமலை யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இயங்குகின்றன.

2 ஆகஸ்ட் 1990.

அநுபந்தம் 4.

## பாதுகாப்பற்ற நபர்களுக்கெதிரான வன்முறைச் செயற்பாடுக ளை எதிர்நோக்கல்

இவ்வாறான வன்முறைச் செயற்பாடுகள் தனிநபர்களினாலோ, ஆயுத மேந்திய கிளர்ச்சிக்காரர்களினாலோ அல்லது அரசாங்கச சார்பான குழுக்களினாலோ அல்லது பந்தோபஸ்துப் படைகளினாலோகூட – அதாவது, இராணுவம் அல்லது பொலீஸ் – மேற்கொள்ளப்படலாம்.

இவ்வாறான செயற்பாடுகள் பொதுவாக குடிமக்களை தனிப்பட்ட ரீதியிலோ (விசாரணையின்றித் தடுத்துவைத்தல், பணயக்கைதிகளாக எடுத்துச் செல்லுதல், படுகொலைசெய்தல்) அல்லது குழுக்களாகவோ (குடிமக்களைப் பெருமளவு எண்ணிக்கையில் இடம்பெயர்த்தல், அகற்றுதல், வெளியேற்றுதல், படுகொலைசெய்தல்) பாதிக்கின்றன.

சிலபோது வன்முறைகள் கண்டறிவதற்குச் சிரமமான வடிவத்தையும் எடுக்கின்றன, பாதிக்கப்படுபவர்கள்மீது நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்தாத பல்வேறு வகையான அச்சுறுத்தல்கள், தொந்தரவுகள், வெளிப்படையாகத் தோன்றாத அச்சவுணர்வு உள்ளுற சமுதாயத்தில் நிலைத்திருத்தல் போன்ற வற்றை இங்கு குறிப்பிடலாம்.

வன்முறையின் அதியுச்ச வடிவம் பயங்கரவாதமாகும்– தனிநபர், குழு அல்லது அரச பயங்கரவாதம். இவை யாவற்றையும் செ.கி.ச.க.யும் சர்வதேச மனிதகுலச் சட்டமும் மனித உரிமைகளும் மனிதநேயக் கோட்பாடுகளும் ஆணித்தரமாக நிராகரிக்கின்றன, தடைசெய்கின்றன, கண்டிக்கின்றன.

பயங்கரவாதம் எந்த வடிவத்தை எடுத்தாலும் இதனை இழைப்பவர்கள் தமது நியாயப்படுத்தமுடியாத செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்கு மிகப் பரவலாக வேறுபடும் சாக்குப்போக்குகளை பயன்படுத்தி வருகின்றனர். இராணுவத் தேவைப்பாடு, ராஜ்ய பந்தோபஸ்து, அடக்கப்பட்ட மக்களின் இறுதிப் புகலிடம் இன்னோரன்ன பலவற்றைக் குறிப்பிடலாம். ஆனால் இவ்வாறான செயற்பாடுகள் யாவுமே மனிதகுலத்தினை அவமதிக்கும் குற்றங்களென்றும், பாதுகாப்பற்ற நபர்களுக்கு மதிப்பளிக்கவேண்டுமெனக்கோரும் மனிதநேயச் சட்டத்தின் அடிப்படை விதிகளை மீறும் செயற்பாடென்றும் செ.கி.ச.க. யினால் அவதானிக்கப்பட்ட பிரதான காரணிகள் எடுத்துக்காட்டுகின்றன. சுழற்சியாகப் போய்க்கொண்டிருக்கும் வன்முறை முன்னெப்பொழுதையும்விட அதிகமான வெறுப்பினையும், மேன்மேலும் அதிகமான கிளர்ச்சிகளையும் உற்பவிக்கின்றன

என்பதையும் இதனை நிகழ்த்துபவர்களையும் இதனை சகித்துக் கொள்பவர் களையும் இறுதியில் இவை நிகழும் சமுதாயம் முழுவதையும் மனிதத் தன்மை மடிவதற்கு உட்படுத்துமென்பதையும் செ.சி.ச.க. கவனத்திற் கொள்கிறது. பாதுகாப்பற்ற எதிரியில் மனிதனைக்காண்பதை அசாத்தியமாக்குவதுமட்டுமின்றி அப்பாவிகளிலிருந்து எதிரிகளை உருவாக்குவதற்குகந்த சித்தாந்தமொன்றி ருக்கும்போது எவ்விதமான மனித விழுமியங்கள் நிலைபெற்றிருக்கும்?

முன்னரைவிட அதிகமான வகைதொகையற்ற வன்முறையை நோக்கிய நடைமுறைப்போக்கு, போராட்டங்களின் வன்முறைக்கு மத்தியில் குறைந்த பட்ச மானுடத்தையேனும் பாதுகாப்பதற்காக செஞ் சிலுவை தனது குரலைக் கேட்கச் செய்வதற்கான அடிப்படைத் திடவுறுதியை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

கண்மூடித்தனமான வன்முறையின் கேடுகளை அழுத்திக் கூறுவதற்கு செ.சி ச.க. ஒரு போதும் வரையறைகளை வகுத்துக்கொள்ளவில்லை. சகல குழுக் களும் மனிதநேயக் கோட்பாடுகளைப் பிரயோகிப்பதற்கு இயலுமான முயற்சி களை மேற்கொள்வதற்காக அவற்றைப் பரவலடையச்செய்வதற்கு அது செயலூக்கத்துடன் உறுதியான பிரச்சாரத்தை மேற்கொண்டுவருகிறது. பல்வேறு எதுக்களாலும் அது அணுகமுயற்சிக்கும் குழுக்களில் சாத்தியமானவற்றினாலும் இது செய்துமுடிக்கப்படுகிறது.

* * *

120 ஆண்டுகால அனுபவத்திலிருந்து பெற்ற பாடம் யாதெனில், தேசிய அளவிலோ அல்லது சர்வதேச அளவிலோ, வீழ்ச்சியடைந்த எதிரி, பாதுகாப் பற்ற நபர் ஆகியோர் உட்பட மனித அந்தஸ்திற்கு மதிப்பளிப்பதனூடாக மட்டுமே மனிதகுலம் யுத்தத்தில் வீழ்ந்துவிடாமல் மீட்சியடையமுடியுமென்று நாங்கள் மீண்டும் நம்பமுடியும். வன்முறையின் நச்சுவட்டத்தினை மனிதவாத நஞ்சுமுறிவு மருந்தினைப் பரவச்செய்வதன் மூலம் உடைத்தெறிய வேண்டும்.

அரசாங்கங்களும் தனிமனிதர்களும், அதிகாரத்திலுள்ளவர்களும் அதற்காகப் போராடுபவர்களும் இந்த அத்தியாவசிய உண்மையினைச் செவிமடுக்கவேண்டும், முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும், இதற்காக வாழவேண்டும்.

* * *

<u>செஞ்சிலுவை சர்வதேசக்கமிட்டியும், உள்நாட்டு குழப்பங்களும் பதட்ட நிலைகளும்.</u>

செ.சி.ச.க. ஜெனீவா, 1986.

PUBLIC LIBR...

80779

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

...லக சேவை
...ப்பாணம்.

16/1, டொன் கரோலிஸ் வீதி, கொழும்பு 5, ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கத்தின் சார்பில் சூரியா விக்ரமசிங்காவினால் வெளியிடப்பட்டு, 281, டீன்ஸ் வீதி, கொழும்பு 10, சமூக சமய நடுநிலையத்தால் அச்சிடப்பட்டது.

Published by Suriya Wickremasinghe on behalf of the Civil Rights Movement of Sri Lanka, 16/1 Don Carolis Road, Colombo 5
Printed at the Centre for Society & Religion, 281 Deans Road, Colombo 10

PUBLIC LIBRARY
JAFFNA.

# මානව හිතෛෂී නියාමයන්
# மனிதாபிமான விதிமுறைகள்
# HUMANITARIAN RULES

---

සාමාන්‍ය වැසියන්ට ගරු කරන්න.

பொது மக்கள் கண்ணியப்படுத்தப்படல் வேண்டும்.

Civilians must be respected.

---

මිනීමැරුම්, ශාරීරික අවයව සිඳ දැමීම හා විරූපී කිරීම, වධහිංසා පැමිණවීම තහනම්ය.

கொலை, அங்கச்சிதைவு, சித்திரவதை தடை செய்யப்பட்டவை.

Murder, mutilation and torture are forbidden.

---

පළිගැනීම් සහ නඩු විභාගයකින් තොරව මරණයට පත්කිරීම තහනම්ය.

பழிவாங்கல், விசாரணையற்ற, மரண தண்டனைகள் தடைசெய்யப்பட்டவை.

Reprisals and summary executions are forbidden.

---

ප්‍රාණ ඇපකරුවන් වශයෙන් අත් අඩංගුවට ගැනීම තහනම්ය.

சிறைப்பிடித்து பணயம் வைத்தல் தடைசெய்யப்பட்டது.

Taking of hostages is forbidden.

---

තුවාලකරුවන්ට ආරක්ෂාව හා වෛද්‍ය සත්කාර සැලසිය යුතුයි.

காயமுற்றோர் பாதுகாக்கப்பட்டுப் பேணப்படல் வேண்டும்.

Wounded must be protected and cared for

---

1949 ජිනීවා සම්මුති හතරට පොදු 3 වැනි වගන්තියෙන් ගත් උද්ධෘතයකි.

நான்கு 1949 ஜெனிவா உடன்படிக்கைகளுக்குப் பொதுவானதாயுள்ள மூன்றுவது ஷரத்தின் பகுதி.

EXTRACT FROM ART 3 COMMON TO THE FOUR GENEVA CONVENTIONS OF 1949

16320

PUBLIC LIBRARY
JAFFNA.